OL/2016/87-T-I,II (NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

87 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I, II
தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I, II
Communication and Media Studies I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** நீங்கள் நாவலொன்றை வாசிக்கின்றீர்கள். அதன் அடிப்படை அம்சங்களின் தொடர் வரிசை யாது ?
(1) தொடர்பாடுபவர் ⟶ நூல் பதிப்பாளர் ⟶ பெறுநர்
(2) தொடர்பாடுபவர் ⟶ செய்தி ⟶ பெறுநர்
(3) பதிப்பாளர் ⟶ செய்தி ⟶ பெறுநர்
(4) தொடர்பாடுபவர் ⟶ ஊடகவழி ⟶ செய்தி

**2.** புகையிரத நிலையமொன்றில் புகையிரதத்துக்காகக் காத்திருக்கும் பயணிகள் குழுவொன்றினிடையே நடைபெறக்கூடிய தொடர்பாடல்
(1) ஆட்களிடைத் தொடர்பாடல்
(2) முறைசார் தொடர்பாடல்
(3) ஆளுள் அல்லது அகமுகித் தொடர்பாடல்
(4) முறைசாராத் தொடர்பாடல்

**3.** பின்னூட்டமொன்றில் வாய்மொழி மற்றும் வாய்மொழியல்லாத தொடர்பாடல் ஒரே நேரத்திலும் வினைநுட்பத்துடனும் பயன்படுத்தப்படுவது
(1) ஆளுள் அல்லது அகமுகித் தொடர்பாடலில் ஆகும்.
(2) ஆட்களிடைத் தொடர்பாடலில் ஆகும்.
(3) குழுத் தொடர்பாடலில் ஆகும்.
(4) வெகுசனத் தொடர்பாடலில் ஆகும்.

**4.** இலங்கையின் முதன்முதலான பிராந்திய ஒலிபரப்புச் சேவை
(1) ருஹுணு (2) மகாநுவர (3) இரஜரட்டை (4) வயம்ப

**5.** ரேகா ஒரு வானொலி அறிவிப்பாளர். அவரது தொழிலுடன் மிகத் தொடர்புடைய தொடர்பாடல் வடிவம்
(1) முறைசார் தொடர்பாடல்
(2) வெகுசனத் தொடர்பாடல்
(3) செவிப்புலத் தொடர்பாடல்
(4) வாய்மொழித் தொடர்பாடல்

**6.** இலங்கையில் முதன்முதல் தயாரிக்கப்பட்ட தொலைக்காட்சித் தொடர் நாடகம்
(1) திமுது முத்து (2) பளிங்கு மெனிக்கே (3) ரட்டகிய அத்தோ (4) கடுல்ல

**7.** இலங்கையிலுள்ள ஊடக உரிமையாண்மையின் இரண்டு முக்கிய வகைகள் யாவை ?
(1) அரசாங்கம் மற்றும் தனியார்
(2) அரசாங்கம் மற்றும் பகுதியளவு அரசுடைமைச் சேவை
(3) கம்பனிகள் மற்றும் தனியாட்கள்
(4) குடும்பங்கள் மற்றும் அரசாங்கம்

**8.** சிறுவர்களுக்கான தொலைக்காட்சி நாடகமொன்றைப் பார்த்துக்கொண்டிருந்த சீதா, அந்த நாடகத்தில் நடித்த சிறுவனும் தனது சகோதரனும் ஒரே முகச் சாயலைக் கொண்டிருந்ததாக உணர்ந்தாள். இவ்வாறு உணர்வதற்குக் காரணமான தொடர்பாடல் வகை
(1) வெகுசனத் தொடர்பாடல்
(2) ஆளுள் அல்லது அகமுகித் தொடர்பாடல்
(3) காட்சித் தொடர்பாடல்
(4) ஆட்களிடைத் தொடர்பாடல்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka.
Department of Examinations, Sri Lanka.

9. செய்திப் பத்திரிகையொன்றின் பிரதி செம்மையாக்கலில், கூடிய பொறுப்புடைமையைக் கொண்டிருப்பவர்
   (1) பிரதம ஆசிரியர்
   (2) செய்தி ஆசிரியர்
   (3) உதவி ஆசிரியர்
   (4) ஒப்புநோக்குநர் அல்லது மெய்ப்புத் திருத்துநர்

10. மிக முக்கியமான தகவல் முதலில் வெளிப்படுத்தப்படுவது
   (1) வன்செய்தி அறிக்கையிடலில் ஆகும்.
   (2) மென்செய்தி அறிக்கையிடலில் ஆகும்.
   (3) புலனாய்வு அறிக்கையிடலில் ஆகும்.
   (4) படைப்பாக்க அறிக்கையிடலில் ஆகும்.

11. ஒரே தொலைக்காட்சி நிகழ்ச்சியானது செய்தி, நடப்பு விவகாரங்கள், உணர்திறன்மிக்க உணர்வு, பல்வகைமை எனப் பல பண்புகள் கொண்ட தொகுதிகளையும் உள்ளடக்கியிருக்குமானால், அது
   (1) விவரண நிகழ்ச்சி
   (2) சோப் ஒபேரா
   (3) மெய்மை நிகழ்ச்சி
   (4) சஞ்சிகை நிகழ்ச்சி

12. வானொலி ஊடகத்தில் பயன்படுத்தப்படும் ஒலி, வார்த்தைகள், மௌனம் ஆகியவற்றால் காட்சிரீதியாக வெளிப்படுத்தப்படாத ஒன்றை நேயர்கள் தமது பார்வையில் கொண்டுவர முடியுமாகச் செய்யப்படுகிறது. இது
   (1) உளக்கற்பனையாக்கம்
   (2) கற்பனையாக்கச் சக்தி
   (3) புலக்காட்சி (perception)
   (4) உணர்திறன்மிக்க உணர்வு

13. செய்திப் பத்திரிகையொன்றின் உள்ளடக்க மாதிரியைத் தயாரிக்கும்போது முதலில் இடம் ஒதுக்கப்படுவது
   (1) செய்திகளுக்கு
   (2) அரசாங்கத் தகவல்களுக்கு
   (3) தலைப்புகளுக்கு
   (4) விளம்பரங்களுக்கு

14. புதிய ஊடக வகைகள் கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க.
   (1) தொலைக்காட்சி, குறுஞ்செய்தி, சமூக ஊடகம்
   (2) மின்னஞ்சல், சமூக ஊடகம், குறுஞ்செய்தி
   (3) இணைய செய்திப் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி
   (4) தொலைக்காட்சி, இணைய வானொலி, மின்னஞ்சல்

15. ஆட்களிடைத் தொடர்பாடலின் சிறப்பு
   (1) வெகுசனத் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப்படுவது
   (2) ஒருவரினுள்ளான தொடர்பாடல் வகை
   (3) சிறு குழுவை இணைக்கப் பயன்படுவது
   (4) பின்னூட்டத்தைத் தவறாது பின்பற்றுவது

16. 'ஒப்புநோக்குதல் அல்லது மெய்ப்புத் திருத்துதல்' என்பது
   (1) மொழிரீதியான தவறுகளைச் சீராக்குவதற்கு வாசிப்பது
   (2) எழுத்துப் பிரதியையும் அச்சுப் பிரதியையும் ஒப்பிட்டு வாசிப்பது
   (3) எழுத்துப் பிழைகளைச் சீராக்குவதற்கு வாசிப்பது
   (4) அச்சு மற்றும் இலக்கணத் தவறுகளைச் சீராக்குவதற்கு வாசிப்பது

17. இலங்கையில் அதிகமான செய்தி நாளிதழ்கள் அச்சிடப்படும் அளவு
   (1) புரோட் சீட் (broad sheet)
   (2) டப்லொய்ட் (tabloid)
   (3) முழு டெமி (full demy)
   (4) கொம்பாக்ட் (compact)

18. மென்செய்தி எனப்படுவது
   (1) பெரும்பாலான மக்களைச் செல்வாக்கிற்குட்படுத்துவது மற்றும் படைப்பாக்க மொழியைப் பயன்படுத்துவது
   (2) பெரும்பாலான மக்களின் கவனத்தைக் கவர்வது மற்றும் அவர்களது உணர்வுகளுக்குத் தீனி போடுவது
   (3) மிகப் பின்னைய தகவல்களைத் தருவது மற்றும் முதற்பக்கத்தில் பெரும்பாலும் அச்சிடப்படுவது
   (4) உட்பக்கங்களில் தோன்றுவது மற்றும் தேசிய மட்ட முக்கியத்துவம் கொண்டது

19. இணையத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மூன்று முனைத் தொலைபேசி மாநாடு
   (1) வெகுசனத் தொடர்பாடலாகும்.
   (2) குழுத் தொடர்பாடலாகும்.
   (3) ஆட்களிடைத் தொடர்பாடலாகும்.
   (4) சமூக ஊடகமாகும்.

20. 'தாக்கம்' செய்தியொன்றின் பெறுமதியைத் தீர்மானிப்பதாகும். இதன்படி, ஏதாவதொரு சம்பவம் சமூகமொன்றில் செய்தியாகக் கணிக்கப்படுவதற்கு, அது நிச்சயம்
   (1) பெரும்பாலானவர்களிடத்தில் குறித்த பாதிப்பொன்றைக் கொண்டிருக்க வேண்டும்.
   (2) பெரும்பாலானவர்களிடத்தில் நேர்த் தன்மையான பாதிப்பொன்றைக் கொண்டிருக்க வேண்டும்.
   (3) அனைவரிடத்திலும் குறித்த பாதிப்பொன்றைக் கொண்டிருக்க வேண்டும்.
   (4) பெரும்பாலானவர்களிடத்தில் அதிக பாதிப்பைக் கொண்டிருக்க வேண்டும்.

21. செய்திப் பத்திரிகை, குழுவாகப் பணியாற்றுவதன் பெறுபேறாகும் எனினும் அதன் பொறுப்புடைமை தங்கியிருப்பது
   (1) ஆசிரியர் பீடப் பணிப்பாளரிடம்
   (2) பிரதம ஆசிரியரிடம்
   (3) பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளரிடம்
   (4) தலைவரிடம்

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka.
Department of Examinations, Sri Lanka.

**22.** இலத்திரனியல் ஊடகங்களுக்குப் பெறுநர்கள் பின்னூட்டம் அளிக்கும் செம்மையான வழிகளாக அமைவன
(1) கடிதங்களும் மின்னஞ்சல்களும்
(2) தபால் சேவைகளும் குறுஞ்செய்திகளும்
(3) கடிதங்களும் சமூக ஊடகங்களும்
(4) குறுஞ்செய்திகளும் சமூக ஊடகங்களும்

**23.** ஊடக நிறுவனமொன்றின் உள்ளக ஊடகப் பணிப்பாளர்கள்
(1) பதவிநிலை ஊடகவியலாளர்கள்
(2) சுயாதீன ஊடகவியலாளர்கள்
(3) பிராந்திய ஊடகவியலாளர்கள்
(4) பிரசை ஊடகவியலாளர்கள்

**24.** பொதுச் சேவை ஊடகத்தின் குறிக்கோளாக அமைவது
(1) கல்வி மற்றும் அபிவிருத்தி பற்றிய தகவல்களை வழங்குவது
(2) பெருந்தொகைப் பெறுநர்களைத் தொடர்ந்து தக்கவைத்திருப்பது
(3) போட்டித்தன்மை அடிப்படையில் பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குவது
(4) அனுசரணை பெற்று ஒலி-ஒளிபரப்பு நிகழ்ச்சிகளை வழங்குவது

**25.** 'குளிரூட்டப்பட்ட அலுவலகத்திலிருந்து வெளியே வந்ததும், எனது மூக்குக்கண்ணாடியில் படர்ந்திருந்த பனிப்புகாரினால் பேருந்தின் பெயர்ப்பலகையை என்னால் வாசிக்க முடியாதிருந்தது.' இது
(1) மொழிசார் இடையூறு
(2) ஊடகவழி இடையூறு
(3) தொழினுட்ப இடையூறு
(4) காட்சிப்புல இடையூறு


**26.** கல்யாணியினால் எழுதப்பட்ட நாவலொன்றை அச்சிடவும் விநியோகிக்கவும் ஒரு நூல் பதிப்பு நிறுவனம் உடன்பட்டிருந்தது. அச்சிடப்பட்ட நாவலின் பிரதிகள் எண்ணிக்கை அடிப்படையிலாக கல்யாணி பெறக்கூடிய வருமானம்
(1) ஒரு புலமைச் சொத்தாகும்.
(2) ஒரு பொருளாதார உரிமையாகும்.
(3) ஆக்கியோன் பங்காகும் (royalty)
(4) ஒரு பதிப்பு உரிமையாகும்.

**27.** வெகுசன ஊடகத்தின் செய்தி உள்ளடக்கத்தை குறைந்தளவில் பாதிக்கக்கூடிய அம்சம்
(1) ஊடக உரிமையாண்மை
(2) தற்போதுள்ள சமூக - பண்பாட்டுப் பின்புலம்
(3) தற்போதுள்ள அரசியற் சூழல்
(4) ஊடகத் தொழினுட்பத்தின் செழுமை

**28.** புகைப்படச் சுருள்களைப் பயன்படுத்தும் கமராக்களைக் கையாளும்போது படல வேகம் (film speed) முக்கியமானதாகும். இதனால் உணர்த்தப்படுவது
(1) ஒளியை உணரும் திறனாகும்.
(2) துரிதமாகப் படங்களை எடுக்கும் திறனாகும்.
(3) துரிதமாகக் குவியப்படுத்தும் திறனாகும்.
(4) படச்சுருளைத் துரிதமாக மாற்றக்கூடிய திறனாகும்.

**29.** உங்கள் பாடசாலை விளையாட்டு விழா அடுத்த வாரம் நடைபெறவிருக்கிறது. அது பற்றி செய்திப் பத்திரிகையொன்றுக்கு அறிக்கையிடும் பொறுப்பு உங்களிடம் தரப்பட்டிருக்கிறது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் தகவல்களைப் பெறக்கூடிய மிகப் பொருத்தமான வழிமுறையாக அமைவது
(1) நேர்காணல்கள் மேற்கொள்ளல்
(2) அவதானம்
(3) ஆவணங்களைப் படித்தறிதல்
(4) மூளைப்புயல்/சிந்தனைக்கிளறல் (brain storming)

**30.**




மேற்குறித்த வரிப்படம் முறைசாராத் தொடர்பாடல் சம்பவமொன்றை எடுத்துக்காட்டுமாக இருந்தால், ஒரு நபர் தனது தெரிவின்படியான வெவ்வேறு தனிநபர் தொகுதியினருக்கு தகவலை வழங்குவாராக இருப்பின், அது அழைக்கப்படுவது
(1) நிகழ்தகவுச் சங்கிலி என
(2) புறணிபேசுதல் சங்கிலி என
(3) தனிச் சங்கிலி என
(4) கொத்தணிச் சங்கிலி என

**31.** நண்பரொருவருடன் பேசிக்கொண்டிருக்கும் நீங்கள் வீதியைக் கடப்பதற்காக பாதசாரிகள் கடவையொன்றின் அருகே காத்திருக்கிறீர்கள். அப்போது பெரும் ஒலிப்பான் சத்தத்துடன் காரொன்று வேகமாகச் செல்வதைத் திடீரெனக் காண்கிறீர்கள். உங்களது அடுத்த கட்டத்திற்குப் பயன்படுத்தக்கூடிய தொடர்பாடல் வகை
(1) காட்சிப்புலத் தொடர்பாடலாகும்.
(2) செவிப்புலத் தொடர்பாடலாகும்.
(3) ஆட்களிடைத் தொடர்பாடலாகும்.
(4) ஆளுள் அல்லது அகமுகித் தொடர்பாடலாகும்.

**32.** புலமைப்பரிசில் ஒன்று தொடர்பாக வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றைச் சமீபத்தில் விசாரித்த ரொஹானுக்கு அவனது கல்விச் சான்றிதழ்களைத் தமக்கு விரைவாக அனுப்பி வைக்குமாறு தொலைபேசி அழைப்பொன்று கிடைத்தது. அதனை மேற்கொள்ள, அவனுக்கு மிகப் பயன்தரும் தெரிவாக இங்கு அமைவது
(1) தொலை அஞ்சல் (telemail)
(2) மின்னஞ்சல்
(3) தொலைநகல்
(4) பேஜர்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka.
Department of Examinations, Sri Lanka.

33. இலங்கை தொலைத்தொடர்பு பரிவர்த்தனை ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் **அமையாதது** பின்வருவனவற்றுள் எது ?
(1) வானொலி அலைவரிசைகளுக்கு உரிமம் வழங்குதல்
(2) தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்வது
(3) இலத்திரனியல் ஊடகங்களுக்கு ஒழுக்கவிதிகளை அமுலாக்குவது
(4) ஊடக அலைவரிசைகளை எச்சரிப்பது மற்றும் உரிமங்களை இரத்துச் செய்வது

34. ஊடக விமர்சகர் எனப்படுபவர்
(1) ஊடக - பெறுநர் உறவை வலுப்படுத்தும் ஒருவர்
(2) ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் ஒரு தொழில்சார் நபர்
(3) ஊடகச் செய்திகளுக்கு எதிர்வினையாற்றும் ஒரு செயற்படு பெறுநர்
(4) ஊடக நிறுவனங்களுக்குச் சேவைகளை வழங்கும் ஓர் அனுசரணையாளர்

35. இணைய வானொலியுடன் **தொடர்பற்றதைத்** தெரிவுசெய்க.
(1) பண்பலை வானொலியுடன் ஒப்பிடுகையில் செலவீனம் குறைவானது.
(2) உலகத்தின் எந்த இடத்திலிருந்தும் கிரகிக்க முடியும்.
(3) கட்டணம் செலுத்தி உரிமம் பெறுதல் அவசியமானது.
(4) எளிமையான உபகரணத் தொகுதியுடன் செயற்படுத்த முடியும்.

36. தொடர்பாடல் பற்றிய கல்விசார் நூலொன்றை அச்சிடும் ராஜா, அதற்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெறும்முகமாக ISBN இலக்கமொன்றைப் பெற உத்தேசித்தார். இதற்காக அவர் அணுக வேண்டியது
(1) பொது நூலகத்தை
(2) தேசிய சுவடிகள் திணைக்களத்தை
(3) கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தை
(4) தேசிய நூலகம் மற்றும் ஆவண சேவைகள் சபையை

37. ஊடக அறிக்கையிடலில் நம்பகத்தன்மை பெருமளவில் தங்கியிருப்பது
(1) துல்லியம், நடுநிலைத்தன்மை, கவருந்தன்மையில்
(2) நடுநிலைத்தன்மை, கவருந்தன்மை, எளிமையில்
(3) தெளிவு, துல்லியம், சுருக்கத்தில்
(4) துல்லியம், நடுநிலைத்தன்மை, தெளிவில்

38. விமல், ஊடகங்களுடன் தொடர்ந்தும் தொடர்பிலுள்ளவர். வேறுவேறான ஊடக நிகழ்ச்சிகளைக் கவனிப்பதை நாளாந்தக் கடமைகளில் இணைத்துள்ளதோடு, ஊடக நிலையங்களோடு அவர்தம் ஊடக உள்ளடக்கம் பற்றி தொடர்பில் இருந்து அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதையும் அவர் வழக்கமாகக் கொண்டுள்ளார். இதனால் விமல்
(1) ஒரு விமர்சன திறன்மிக்க பெறுநர் ஆவார்.
(2) ஒரு நடுநிலைப் பெறுநராவார்.
(3) ஒரு செயற்படு பெறுநராவார்.
(4) ஒரு செயற்படாத பெறுநராவார்.

39. தொலைக்காட்சியின் சிறார் நிகழ்ச்சிகளுக்கிடையே தோன்றும் விளம்பரங்கள், சிறுவர்களின் பெறுமதியை நுகர்வோராகக் காட்டுகின்றன. இந்தவகை விளம்பரங்களுக்கான சிறப்பான உதாரணமாக அமைவது
(1) துணி வகைகள், அழகுசாதனப் பொருட்கள், உணவு
(2) சிறாருக்கான தயாரிப்புகள், போசணை, சிறார் சுகாதாரம்
(3) பால் மா, சிறார் காப்புறுதி, கல்வி
(4) செயற்கை உணவு, விளையாட்டு உபகரணங்கள், இனிப்புப் பொருட்கள்

40. 'சமூக ஊடக வலைப்பின்னலில் தற்போதைய போக்குகள்' என்பது வகுப்பறையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் கருப்பொருளாக இருந்தது.

**கவிதா :** இது ஊடக சுதந்திரத்தின் புதிய படிக்கல், அதேவேளை வேறுபட்ட அபிப்பிராயங்களைப் பகிரும் சந்தர்ப்பங்களை இது விரிவாக்குகிறது.

**ராணி :** பிரதான ஊடகங்களில் கலந்துரையாடப்படாத விடயங்கள் பற்றிப் பேச சமூக ஊடகங்கள் அதிக இடத்தைக் கொண்டிருக்கின்றன.

**தேவி :** ஒருவருடைய அடையாளத்தைக் காண்பிக்காமலேயே அடுத்தவரின் தோற்றப்பாடுகளைச் சிதைப்பதற்கு சமூக ஊடகங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

**நிருபா :** அச்சு ஊடகத்தோடு ஒப்பிடுகையில் தகவல்களை இற்றைப்படுத்தும் வாய்ப்பு சமூக ஊடக வலைப்பின்னல்களில் வரையறைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறித்த பங்கேற்பாளர்களில், மிகச் சரியான கருத்துகளை முன்வைத்தவர்கள்
(1) கவிதா, ராணி மற்றும் நிருபா
(2) கவிதா, ராணி மற்றும் தேவி
(3) ராணி, தேவி மற்றும் நிருபா
(4) கவிதா, தேவி மற்றும் நிருபா

* *

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka.

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

87 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I, II
தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I, II
Communication and Media Studies I, II

## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் II

* **முதலாம்** வினாவையும் எவையேனும் **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* **முதலாம்** வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களுக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** ருவான், மகேஷ் மற்றும் கமலா ஆகியோர் தாம் ஒன்றாக இணைந்து தயாரித்த இருபது பக்கங்கள் கொண்ட ஊடகத் திட்ட அறிக்கையை அச்சிடுவதற்காக, நகரிலுள்ள நவீன வசதிகளுடன் இயங்கும் தொடர்பாடல் நிலையத்திற்குச் செல்ல உடன்பட்டனர்.

(i) மேற்குறித்த உடன்பாடு எந்த வகைத் தொடர்பாடல் அடிப்படையில் ஏற்பட்டது ?

(ii) மேற்குறித்த திட்ட அறிக்கைக்கான தரவுகளைத் திரட்டும்போது பயன்பட்டிருக்கக்கூடிய **இரண்டு** வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(iii) கணினி வழி அச்சிடலின் **இரண்டு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(iv) தட்டச்சு செய்து முடிந்ததும் ஆவணத்தின் மென்பிரதியொன்றை (softcopy) வெளிநாட்டில் வாழும் தனது சகோதரனுக்கு அனுப்புவதாக மகேஷ் வாக்குறுதியளித்திருந்தார். இதற்கு மிகப் பொருத்தமான வழிமுறை யாது ?

(v) அச்சிடப்பட்ட ஆவணத்தின் வன்பிரதியொன்றை (hardcopy) தனது தனிப்பட்ட தேவைக்காகப் பெற்றுக்கொள்ள ருவான் உத்தேசித்திருந்தார். இதற்கு மிகப் பொருத்தமான வழிமுறை எது ?

(vi) அச்சிடப்பட்ட அறிக்கையின் முதற்பக்கத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள பிளாஸ்ற்றிக் உறையொன்றை நுழைப்பது பொருத்தமெனக் கமலா கூறினார். இந்த வழிமுறை எவ்வாறு அழைக்கப்படுகின்றது ?

(vii) மேற்குறித்த ஆவணத்தைப் புத்தக வடிவில் கட்டி இணைத்துக்கொள்ளப் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** புத்தகம் கட்டும் வழிமுறைகளைப் பெயரிடுக.

(viii) யுனெஸ்கோ வரைவிலக்கணப்படி, ஒரு புத்தகம் அவசியம் கொண்டிருக்க வேண்டிய பக்கங்களின் குறைந்தளவு எண்ணிக்கை யாது ?

(ix) புத்தகங்கள், சஞ்சிகைகளைத் தவிர அச்சு ஊடகத்தின் வேறு **இரண்டு** வடிவங்களைப் பெயரிடுக.

(x) அச்சு ஊடகத்தின் பலவடிவங்களிலும் புகைப்படங்களின் பாவனை பொதுவாகக் காணக்கிடைக்கிறது. அச்சு ஊடகத்தில் பயன்படுத்தப்படும் வேறு **இரண்டு** காட்சி வடிவங்களைக் (visual forms) குறிப்பிடுக.

**2.** (i) "இலங்கையில் முதன்முதலாக அச்சிடப்பட்ட செய்திப் பத்திரிகை லக்மினி பஹன."
மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ? உங்கள் விடைக்கான காரணத்தைத் தருக.

(ii) "புலமைச் சொத்துச் சட்டத்தில், 'ஆக்கம்' என்பது புத்தகங்கள், கட்டுரைகள், துண்டுப்பிரசுரங்களைக் குறிக்கின்றது."
மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ? உங்கள் விடைக்கான காரணத்தைத் தருக.

(iii) "ஒரு செய்தி முறையாகப் பெறுநருக்கு எடுத்துச் செல்லப்படாதிருக்கும்போது 'மொழிரீதியான இடையூறு' உருவாகின்றது."
மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ? உங்கள் விடைக்கான **மூன்று** காரணங்களைத் தருக.

(iv) "அச்சு ஊடகத்தில் புகைப்படங்களை இணைப்பது அனுகூலமான ஒன்று."
மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ? உங்கள் விடைக்கான **நான்கு** காரணங்களைத் தருக.

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka.
Department of Examinations, Sri Lanka.

**3.** (i) இலங்கையில் தற்போது, பொதுவாகப் பயன்படுத்தப்படும் வானொலி அலை (radio wave) வகை யாது ?

(ii) செய்திப் பத்திரிகைகள் - சஞ்சிகைகள், தொலைக்காட்சி - சினிமா ஆகிய ஊடகங்களின் பெறுநர்களை அறிமுகப்படுத்திக்கொள்ளப் பயன்படும் **இரண்டு** விசேட பெயர்களை முறையே எடுத்துரைக்க.

(iii) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் **மூன்று** வெவ்வேறு வகைகளைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

(iv) ஊடக அறிக்கையிடலில் பயன்படுத்தக்கூடிய மூலாதாரங்கள் **நான்கைச்** சுருக்கமாக விவரிக்குக.

**4.** இலங்கை தேசிய பாடசாலையின் நூறாவது ஆண்டு நிறைவுவிழா கல்வி அமைச்சரின் தலைமையின் கீழ் நடைபெறவுள்ளது.

(i) பாடசாலையின் வரலாற்றை எடுத்துக்கூறும் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வகையான திரைப்படமொன்று எவ்வாறு அழைக்கப்படும் ?

(ii) குறித்த விழாவில் மேற்படி திரைப்படத்தை திரையிட அவசியம் பயன்படுத்த வேண்டிய ஊடக உபகரண வகைகள் **இரண்டினைப்** பெயரிடுக.

(iii) பாடசாலைக்காக புதிய மின்னஞ்சல் முகவரி ஒன்று உருவாக்கப்பட்டது. மின்னஞ்சலின் **மூன்று** பயன்களைச் சுருக்கமாக விளக்குக.

(iv) மேற்குறித்த நிகழ்வு சம்பந்தமான செய்திக்கு, நான்கு முக்கிய விடயங்களைக் கொண்டதான 'தலைப்பு' (lead) ஒன்றை எழுதி, அந்த முக்கிய விடயங்களைத் தெளிவாக அடிக்கோடிட்டுக் காட்டுக.

**5.** (i) இலங்கையிலுள்ள செய்திப் பத்திரிகைகளில் பல ஒழுக்கநெறிக் கோவைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒன்றைப் பெயரிடுக.

(ii) அச்சு ஊடகத்தில் துண்டுப் பிரசுரங்களின் பயன்பாடு, ஒரு விசேட வகைத் தொடர்பாடலாகும். இவை மிகப் பொருத்தமாகப் பயன்படுத்தப்படக்கூடிய **இரண்டு** சூழ்நிலைகளைக் குறிப்பிடுக.

(iii) செய்திப் பத்திரிகைகளுக்கு செய்திகளை அறிக்கையிட 'தலைகீழ் பிரமிட்' முறை பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த வகை அறிக்கையிடலின் **மூன்று** அனுகூலங்களைச் சுருக்கமாக விளக்குக.

(iv) வானொலி, வலுவான ஓர் ஊடக வடிவமாகும். ஆனால், அது தனக்கேயான பலவீனங்களையும் கொண்டிருக்கின்றது. அவற்றுள் **நான்கினை** விவரிக்குக.

**6.** ரவி, பாடசாலைகளுக்கிடையிலான பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்றபோது அவனது பேச்சாற்றலைப் பற்றிய பெருமையைப் பலரும் கேள்விப்பட்டனர்.


(i) ஒரு பேச்சாளர் செவிமடுப்பாளர்களை சுற்றிவரத் தொடர்ந்து பார்த்தவாறே பேசுவார். இந்த நுட்பம் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

(ii) போட்டியில் ரவிக்கு அவசியம் உதவியாக இருந்திருக்கக்கூடிய **நான்கு** வாய்மொழியற்ற அம்சங்களைப் பெயரிடுக.

(iii) ரவியின் வெற்றி பற்றிய தகவல் செய்திப் பத்திரிகைகளில் வெளியானது. செய்திப் பத்திரிகைகளின் **மூன்று** வெவ்வேறான ஊடக உள்ளடக்க வகைகளைச் சுருக்கமாக விளக்குக.

(iv) ரவி பேச்சுப்போட்டிக்குத் தயாராவதற்காக, பெரும்பாலும் தகவல்களைப் புதிய ஊடகத்திலிருந்து பெற்றுக் கொண்டான். புதிய ஊடகத்தின் இயல்பை **நான்கு** அம்சங்களைப் பயன்படுத்தி விளக்குக.

**7.**




(i) மேற்குறித்த வரிப்படம் ஹரோல்ட் லாஸ்வெல்லின் தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருக்குமானால், இறுதியிலுள்ள **X** ஐப் பெயரிடுக.

(ii) தொடர்பாடலின் செயற்பாடுகள் **X** உடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளன. தொடர்பாடலின் **நான்கு** முக்கியமான செயற்பாடுகளும் யாவை ?

(iii) பாடசாலை வகுப்பறையில் இடம்பெறுவதும் ஒரு தொடர்பாடல் நடவடிக்கையே ஆகும். பாடசாலை வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய எறிவையற்ற வகுப்பறை ஊடக உபகரணங்கள் **மூன்று** பயன்படுத்தப்படும் முறைகளைச் சுருக்கமாக விவரிக்குக.

(iv) மேற்குறித்த வரிப்படத்தின் மூலம் எடுத்துக்கூறப்பட்ட தொடர்பாடல் செயன்முறை, வெகுசன ஊடகங்களிலும் நடைபெறுகிறது. வெகுசன ஊடகங்களின் **நான்கு** முக்கிய இயல்புகளை விவரிக்குக.

* * *

Department of Examinations, Sri Lanka.